மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை அமைக்க என்.டி.சி.-யிலிருந்து முழுத் தொகையையும் ஏற்றுக் கொள்கிருர்கள். கிட்டத்தட்ட 111 லட்சம் ரூபாய் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இப்போது ரூ. 83½ லட்சம் அவர்கள் கொடுப்பதாக ஒத்துக் கொண்டு விட்டார்கள். நெல் உற்பத்தி அதிகமாகயிருக்கும் மாவட்டங்களுக்கு மாத்திரம் முதலிடம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை.

Food Poisoning

* 205. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether 14 persons were admitted at Srivilliputhur hospital in an unconscious state due to consumption of poisoned food ?

நச்சுணவு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

ஸ்ரீவில்லிபுத்தூரில் நச்சுணவு சாப்பிட்டு சமீபத்தில் மகாளய அமாவாசையன்று 14 பேர் சுய நினைவிழந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஏதோ கண்டதைச் சாப்பிட்டு இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. சமீபத்தில் கூட பூந்தமல்லியில் இத்தகைய சம்பவம் ஏற்பட்டு 100 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே இதற்கெல்லாம் என்ன அடிப்படையான காரணம் என்று விசாரித்து அதற்குரிய தடுப்பு முறைகளை கையாண்டு தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காரணம் இருக்கிறது. வில்லிபுத்தூரில் கேழ்வரகு தோசை சாப்பிட்டதால் ஏற்பட்டது. அந்த கேழ்வரகு "non-poison" என்று சொல்லப்படுகிறது. ஆங்காங்கு உள்ள நிலைமைக்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. நேற்றிரவுகூட பிரியாணி சாப்பிட்டு பலர் பாதிக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : கேழ்வரகு அல்ல. அதற்கு வரகு என்று பெயர். அந்த வரகை நீண்ட நாட்களுக்கு வைத்திருந்தால் அது விஷத் தன்மை உடையதாகிவிடும் என்று சொல்லப்படுகிறது. கிராமங்களில் இதை 5 வருடம், 10 வருடம் என்று வைத்திருக்கிருர்கள். கேழ்வரகு என்று குறிப்பிட்டிருந்தால் அதை வரகு என்று திருத்திக் கொள்வார்களா ? வரகு சாப்பிடக்கூடாது என்று உத்தரவு போடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இங்கு கேழ்வரகு என்று தான் இருக்கிறது.

Dharamangalam Hospital

* 206. *Q.*—THIRU N. R. THIAGARAJAN :—Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the hospital in Dharamangalam, Salem District is functioning without a Doctor ; and

(*b*) if so, when a doctor will be appointed there ?

தாரமங்கலம் மருத்துவச்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சேலம் மாவட்ட தாரமங்கலம் மருத்துவச்சாலை மருத்துவர் யாரும் இல்லாமல் இயங்கி வருகிறதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது மருத்துவர் நியமிக்கப்படுவார்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லாமல் போவது இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது. நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது 45 ஆஸ்பத்திரிகளை நிர் வகித்து வந்திருக்கிறேன். அடிக்கடி டாக்டர்கள் லீவு போட்டுவிட்டோ, ராஜினாமா செய்துவிட்டோ, அதிகமாக சம்பாதிக்கவென்று வெளியே போய்விடுகிறார்கள். டிபார்ட்மெண்டிற்கு எழுதிக் கேட்டால் டாக்டர்கள் போட்டிருக்கிறோம் என்று தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த ராஜ்யத்தில் 40, 50 ஆஸ்பத்திரிகள் வரை இல்லை என்பதை மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். டாக்டருக்குப் படித்து நிறைய பேர் வேலைக்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளுக்கு, அவர்களை வேலையில் அமர்த்த அமைச்சர் ஏற்பாடு செய்வாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஒத்தாசையாக இருக்கும். நிச்சயமாக டாக்டர்கள் எங்கெங்கே இல்லையோ அங்கெல்லாம் டாக்டர்கள் போட நடவடிக்கை எடுக்கப்படும்.

Pennathur T. B. Sanatorium

*** 207 *Q*.—Thiru N.R.THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—**

(*a*) whether it is a fact that patients are not admitted into the T.B. Sanatorium, which is situated 5 miles away from Vellore, due to lack of water facility; and

(*b*) the steps taken by the Government of Madras thereon ?

பெண்ணாத்தூர் காசநோய் விடுதி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) வேலூரிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள காசநோய் உடல் நலம் பெறுமிடத்திற்குத் தண்ணீர் வசதி இல்லாததால், நோயாளிகள் அனுமதிக்கப்படுவது இல்லையா ?

(இ) தண்ணீர் கஷ்டம் தீரத் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) ஆம். பெண்ணாத் தூர் காசநோய் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆகையால் 124 படுக்கைகள் கொண்ட விடுதியில் 43 பேர்கள் மட்டும் அனுமதிக்கப் பட்டனர்.

(இ) அந்த காசநோய் விடுதியில் உள்ள கிணறு 6 அடி அதிகமாக தோண்டப்பட்டும் வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகையால் மேலும் ஒரு குழாய்க் கிணறு 277 அடி ஆழம் தோண்டப்பட்டு அதில் "டர்பைன் பம்பும்" இணைக்கப்பட்டது. தற்போது விடுதியின் தேவைக்குமேல் தண்ணீர் கிடைக்கிறது.